**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு. ரவிச்சந்திரன் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | முருகன் | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**10.10.2023 OS No. 109/2019 பிவா.சா.1 முருகன் ஆஜர்**
**முதல் விசாரணை தொடர்ச்சி:**

**1. 24.12.2003-ம்** தேதியிட்டு எனக்கு என்அப்பா எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(தானசெட்டில்மெண்ட் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 3.8.2004-ம் தேதியிட்டு நானும் என் அப்பாவும் மானாமதுரை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரம் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன்.**(அடமான கடன் பத்திரம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்திற்கான புகைப்படங்கள் (6 எண்ணம்) குறுந்தகடு தாக்கல் செய்கிறேன்.**(புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு பி.வா.சா.ஆ.3 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**2.** தாவா சொத்திற்கு என் பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் (5 எண்ணம்) தாக்கல் செய்கிறேன்.**(வீட்டு வரிரசீதுகள் பி.வா.சா.ஆ.4 வரிசை (5 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்திற்கு என் பெயரிலுள்ள மின்கட்டண ரசீதுகள் (7 எண்ணம்) தாக்கல் செய்கிறேன்.**(மின்கட்டணரசீதுகள் பி.வா.சா.ஆ.5 வரிசை (7 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வீட்டு வரி கேட்பு பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**( வீட்டு வரி கேட்பு பதிவேடு பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது வாக்காளர் அடையாள அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **( வாக்காளர் அடையாள அட்டை பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** எனது குடும்ப அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன்.**( குடும்ப அட்டை பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது ஆதார் அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன்.**( ஆதார் அட்டை பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது) .** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.